அ.வ.எண்: 177/2017 நாள்:14.03.2024

வா.சா.1 . காசிநாதன்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1) தாவா சொத்தானது என்னாலயோ எனது முன்னோர்களாலோ விலைக்கு வாங்கப்பட்ட சொத்தல்ல என்றால் சரிதான். தாவா சொத்தானது தமிழக அரசின் பொதுப்பணிதுறைக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 10 ஏக்கர் இருக்கும். தாவா சொத்தை நான் எந்த அனுபவத்தின்படி அனுபவித்து வருகிறேன் என்றால் குத்தகை என்ற பெயரில் நான் அனுபவித்து வருகிறேன். நான் குத்தகைக்கு வாங்கியதற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) தாவா சொத்தை என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலிருந்தே அனுபவித்து வந்தாரா என்றால் ஆமாம். என் தந்தை எப்போது இறந்து போனார் என்றால் 1965 ஆம் ஆண்டு இறந்தார். என் தந்தை இறந்த பிறகு தாவா சொத்தை பாகம் பிரித்து கொண்டோமா என்றால் ஆமாம். குத்தகை ஒப்பந்தமானது வாய்மொழி ஒப்பந்தமா அல்லது எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் வாய்மொழி ஒப்பந்தம்தான். அரசின் சொத்தை நாங்கள் பாகம் பிரித்து கொள்ள எந்தவிதமான உரிமையும் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) தாவா சொத்தை அரசு பொது ஏலம் விடுவதற்கு முயற்சித்த போது அதனை எதிர்த்து என் தந்தையார் 17.10.1968 ஆம் ஆண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கானது திரும்ப மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். தமிழக அரசின் கொள்கை முடிவு அடிப்படையில் படுகை நிலங்கள் அனைத்தையும் தனிநபர்களுக்கு விடுவதில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2016 ஆம் ஆண்டு கிஸ்தி ரசிது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

4) மேற்படி ரசீதானது பொதுப்பணித்துறை வழங்கவில்லை நான் போலியாக தயாரித்த ரசீது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக மதுரை உயர்நீதிமன்றத்தில் ரிட் பெட்டிசன் எண். WP No.5186/2006 and WA No. 43/2013 என்று தாக்கல்

செய்துள்ளனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவானது உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தாவா சொத்தானது 01.07.2007 ஆம் ஆண்டு முதல் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டுக்கு கொண்டவரப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தைப் பொறுத்தவரை சட்டப்படியான அனுபவம் எனக்கு இல்லை என்பதால் நான் கோரும் தற்காலிக உறுத்துக்கட்டளையோ அல்லது நிரந்தர உறுத்துக்கட்டளையோ எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.